750

பதிவு எண் —

வெள்ளிக் கிழமையில் குருகுலக் கிளர்ச்சித் தாள்

முல்லைக்கொடி

தமிழ்க் கிழமை வெளியீடு :- இது, சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—ரு. குருகுலம், மாம்பாக்கம் ; விகிருதி, தை ; 9—2—51. தளிர்—கஎ

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 MAR 951
MADRAS

"குணநலம் சான்றோர் நலனே ; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று"

"கடனென்ப நல்லவை யெல்லாம் ; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

மங்கல வாழ்த்து

ஒத்தாழிசைக் கலி.

கார்விளை மலர்நீலம் கமழ்வயல் பரப்பெங்கும்
ஏர்விளை இசையோங்கும் எழில்செறி கயப்பாக்கம்
மொய்த்தபுகழ் அரசோம்பு பூத்துலிங்க செட்டியார்தம்
சித்தமிசை பயில்தவத்தின் செல்வியென வந்துதித்த
வாழுநெறிக் கலைஅமிர்த வல்லியென வழங்கிடுபேர்

எழிலிசையார் செல்வி! உளத் தெய்தியநற் பண்பதனால்
பெருவளநல் லூர்ப்பெரியர் பேசுநலம் சான்றிடுசீர்த்
திருவுடையார் எனும்'ராஜா சிதம்பரனார்'தவச்செல்வர்
'சந்திரசேகரனார்'தம் தகுதிமனைச் செல்வியெனும்
செந்திருவாய் இன்றிவண்நீ சிறப்புற்றாய்! ஈதுகேள்:

நாடியரும் உயர்வெல்லாம் நங்கையர்தம் மனையறத்தின்
பீடியாக் கருதுவதால் பிறப்பதெனப் பேசிடுவார்;

சொல்லினிய வாழ்க்கையினில் தூமடவார் துணைசிறப்பின்
நல்லேறாய் ஆடவர்கள் நானிலத்தில் உலவுவரால்;

நாற்குணமே நல்லரணா நல்மனை ஆட்சிசெயும்
பேற்றினிலே பெண்ணுலகு பிறங்குவதே சிறப்பாமால்;

எனவாங்கு,

செல்விநின் வாழ்க்கைச் செவ்விக் குரியன
சொல்லினம் சிலவே; நல்லருட் பாங்கில்
செல்வமும் பெருகச் செறிகநல் லூழி!

அறிவுடை மக்கட் பெறுக! நற் செயல்கள்,
திருவார் குருகுலம் பெருமகிழ் சிறப்ப,
அன்புடன் அன்பற் கென்றும்

சிந்தையில் இனிக்கச், சிறந்துவாழ் கவ்வே.

—கவிஞர் சி. து. கன்னிசாமி

ஆண்டுக் கையொப்பம் ரு. 4. தனித் தாள்— அணா 1

தமிழ் மூவர்

[புலவர் முருகவேள்]

தொல்காப்பியர்

தொல்காப்பியரும் திருவள்ளுவரும் மெய்கண்டாரும் தமிழகத்தின் ஒப்புயர்வில்லாப் பெருமக்களாவர். தமிழ் வானத்தில் ஒளிவிட்டிலங்கும் மிகப் பெரு விண்மீன்கள் இவர்கள். இம் மூவரையும் தமிழகத்தின் கொடிநிலை (ஞாயிறு) வள்ளி (திங்கள்) கந்தழி (தீ) எனலாம். 5000 ஆண்டுகட்கு முற்பட்டுத் தொல்காப்பியரால் தமிழில் எழுதப்பட்ட இலக்கண நூலைப் போன்றதொரு இலக்கண நூல் வேறு எம் மொழியினுமே இல்லை.

"...பண்ணுறத் தெரிந்தாய்ந்தவிப்
பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச் சில இலக்கண
வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக் கிடந்ததா
எண்ணவும் படுமோ?"

எனத் தமிழர்க்குத் தம் இலக்கண நூல் பற்றிப் பெருமிதங் கொள்ளும் உரிமையராகும் தகுதியளித்தது இத் தொல்காப்பியமே யாகும். "தள்ளாப் பொருளியல்பிற் றண்டமிழ்" எனப் பரிபாடலும், "ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்" எனச் சேக்கிழார் பெருமானும் வியந்து போற்றும் பொருளிலக்கணத்தினை வரையறுத்துரைத்த பெருமை தொல்காப்பியம் ஒன்றற்கேயுரியது. தனக்குப் பின்னர் எத்துணையோ பல இலக்கண நூல்கள் எழுந்தனவேனும், அவையெல்லாம் தன் முன்னே ஞாயிற்றின் முன்னர் மின்மினிபோல மழுங்கி யொழியவும், தான்மட்டும் கால வெள்ளத்திற் பட்டுக் கழிந்தொழியாது சாலவும் பொலிந்து, வடமீன் புரைய நெடுநாள் நிலைபெற்றிலங்கி வருதலொன்றே அதன் அருமை பெருமைகளை விளக்கப் போதிய சான்றாகும். பழந் தமிழர் நாகரிக வாழ்க்கைச் செய்தி குறித்த ஆராய்ச்சிகட் கெல்லாம் அடிப்படையாய் நின்றுதவுவதும் தொல்காப்பியமேயாம். அம்மட்டோ! திருவள்ளுவர்க்கும் மெய்கண்டார்க்கும், அவர்கள் இயற்றிய 'திருக்குறள்' அறநூலுக்கும், சிவஞானபோத மெய்ப்பொருள் நூலுக்கும் அடிப்படையாய் அமைந்ததூஉம் தொல்காப்பியமே எனின், வேறு பிறிது கூறுவது யாதுளது?

திருவள்ளுவர்

இஃதொரு புறமிருப்ப, இனித் திருக்குறளைப் பற்றியோ கூற வேண்டுவதே இல்லை. "எல்லாப் பொருளும் இதன்பாலுள இதன்பால், இல்லாத எப்பொருளும் இல்லையால்" என அறிஞர்கள் அதனைப் போற்றுகின்றனர். எங்ஙனம் தொல்காப்பியம் தலை சிறந்த இலக்கணநூலோ, அங்ஙனமே தலை சிறந்த அறநூலாகத் (Ethics) திருக்குறள் விளங்குகின்றது. இலக்கண நூற்களுள் தொல்காப்பியத்திற்கு ஒப்பாவதும், அறநூல்களுள் திருக்குறளுக்கு ஒப்பாவதும் பிறிதொன்றில்லை. அவைகள் தமக்கிணை தாமேயாவன ஆகும்.

மெய்கண்டார்

இங்ஙனமே, மெய்கண்டார் இயற்றிய "மெய்கண்டான் நூல்" எனப் பெற்ற சிவஞானபோதமும் தமிழ்த் தத்துவ நூல்களுளெல்லாம் தலை சிறந்ததாகும். ஒரு காலத்தில் 'அத்துவிதம்' என்னும் சொற்பொருள் உண்மை காணமாட்டாது, தத்துவ உலகமே தலை தடுமாறி மயங்கி நின்றதாக, அதன் உண்மையினை இற்றென்று கண்டு தெற்றென்று காட்டி நிலைநாட்டி வெற்றி கொண்டவர் நம் மெய்கண்டாரேயாவர். இச் சிறப்பினையே,

"பொய்கண்டார் காணாப்
புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதனருள்
மேவுநாள் எந்நாளோ"

எனத் தாயுமானுர் புகழ்ந்து போற்றி வியந்தனர். உலகப் பெருநூற்களுளெல்லாம் உருவிற் சிறியதாய் அறிவிற் பெரியதாய் விளங்கற்பாலது தொல்காப்பியம், அதனினும் சிறியதாய்ச் சிறந்தது திருக்குறள். அதனினுஞ் சிறியதாய்ச் சிறந்திலங்குவது 'மெய்கண்டான் நூல்'. மெய்கண்டார் நூலைப் போன்று உருவாற் சிறியதாய்ப் பொருளாற் பெரியதாய நூல் உலகிலேயே வேறொன்று நூலும் இல்லை என அடிக்கடி கூறுவர் பேராசிரியர் மறைமலை அடிகள். மேலை நாட்டிற் சாக்ரடீஸ் (Socrates) முதலாக வில்லியம் ஜேம்ஸ் (William James) ஈறாக உள்ள தத்துவ நூற் பேராசிரியர் (Philosophers) நூற்கருத்துக்கள் அத்துணையும் மெய்கண்டாரின் 12 நூற்பாக்களுள் அடங்கிக்கிடப்பதோடு, அவர்களாற் கூறப்படாத பல அரும்பேருண்மைகளையும் தெளிவாகக் கூறுவது மெய்கண்டார் நூல் என்பது அவர்களின் ஆராய்ச்சி முடிவு. இதுபற்றியன்றே,

"சிறிய ஆடியிற் பெரியமால்
வரைப்பொருள் செறிந்தாங்கு
அறிவு நூல்களின் முடிபெலாம்
அகத்தடக் கியமைந்தார்
நெறியின் நீடிய நிகழ்சிவ
ஞானபோ தத்தைக்
குறிய தீந்தமி ழால்உரை குரவன்"

என மெய்கண்டார் போற்றப்படுவாராயினர்.

முடிவு.

எனவே, இங்ஙனம் உலகமே வியந்து போற்றத்தக்க பெருநூல்களாகிய தொல்காப்பியம் திருக்குறள் 'மெய்கண்டான் நூல்' (சிவஞானபோதம்) என்னும் மூன்றினையும் இயற்றியளித்துத் தமிழர்க்குப் பெருமை தந்த இத் தமிழ் மூவரினையும், தமிழகமும் உலகமும் தக்காங்கு உணர்ந்து போற்றுவனவாக! தமிழர்களின் மதியிலச்சினையாய் விளங்கும் தொல்காப்பியத்தினையும், திருக்குறளையும், சிவஞானபோதத்தினையும் தமிழராய்ப் பிறக்கும் பேறுபெற்றோர் அனைவரும் கற்றுச் சிறந்து நலம் பெறுவாராக! வாழ்க தமிழ் மூவர்! வெல்க அவர்கள் புகழ்!

இனி, 'அடியார் திருக்கூட்டம்' பற்றிச் சிறப்புச் செய்கின்றார். கூட்டம் என்பது, பொதுவாக மக்கள் கூட்டத்தை உணர்த்தும்; 'திருக்கூட்டம்' என்பது, சிறப்பும் தெய்வத் தன்மையும் வாய்ந்த 'அடியார் குழு'வை உணர்த்தும். அம்பலவாணரைப் பாடல்களால் பரவும் அடியாரும் பலர் உள்ளனர். அவர் பாடற் கருத்துக்களை அறிந்து இன்புறும் அடியாரையே இங்கு ஆசிரியர், 'திருக்கூட்டம்' என்றும் 'புனிதர் பேரவை' என்றும் போற்றுகின்றார். அத்தகைய திருக்கூட்டம், முறைப்படி, உலகத்தில் வெற்றிபெற்று விளங்கவேண்டும் என்பது சேக்கிழார் கருத்து.

பெரியோர் பாடற்கருத்துகள் மக்களைப் பெரிதும் வாழ்விக்கும்; தூய நடையுடை பாவனைகளைப் பெருக்கி உதவும். எல்லாப் படியாலும் புனிதமும் மேன்மையும் நல்கும்.

சான்றோர் பாடல்களுடன் பழகுவது அச் சான்றோருடன் நேரிற் பழகுவதினும் மேலானது; ஏனென்றால், அவர்கள் நமக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கருதியவைமட்டும் திரட்டியெடுத்த தெளிவு நிலையில், பாட்டுகளில் வந்திருக்கின்றன.

பெரியோர் பாடல்களை அன்புடன் பாராயணஞ் செய்தும், உருகி ஓதியும், பொருளாராய்ந்தும், அவற்றில் இரண்டறக் கலந்தும் நுகரலாம். இப் புனிதப் பணி எங்கும் நடைபெற வேண்டும். வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அப்போது அப் பாடல்களே விளங்கும். அன்பர் பலர் திரள் திரளாயிருந்து இதனை நிறைவேற்றிவர வேண்டும்.

இத்தகைய புனிதர் பேரவை அங்கங்கும் நிரம்பப் பெருகி விளங்கி வெல்க எனச் சேக்கிழார் விரும்புகின்றார். நாடு உய்வதற்கு வழி இது என்று தேற்றுகின்றார். ஆசிரியர் ஆவலை அன்பர்கள் நிறைவேற்றுதல் இன்றியமையாதது.

இதனை அடுத்து, ஆசிரியர், 'அவையடக்கம்' கூறுகின்றார். 'அடியார் பெருமை அளப்பரிது, அன்பு

பெரிய புராணம்

செலுத்த, ஏதோ சொல்லுகின்றேன்; உப்புக் கடலின் அருகில் உள்ள தெளிநீர் ஊற்றுப் போன்றது, உலக மக்களின் அருகில் விளங்கும் அடியாரின் பெருமை; ஊற்றில் நீர் எவ்வளவு பெருகிவருமாயினும், நாய், நாவின் நுனியினால் தொட்டுத்தொட்டே உண்ணும் சிறுமையுடையதாவது போல, அடியேனும் அவர் பெருமையை நிறைய நுகர்ந்து கூறுதற்கில்லாத சிறுமையுடையேன்; சொல்லுவோன் சிறுமை கருதாது, எடுத்த பொருளின் சிறப்புக் கருதியே பெரியோர் உரைகொள்வர். சோழன் அநபாயன் அரசவையும் இக் காரணத்தால் இதனை விரும்பும். அறிதற்கரிய திருத்தொண்டர் திறங்களைத் தெளிவு குறைந்த அடியேன் எடுத்தோதுதல் கூடாமையாயினும், "உலகெலாம்" என்று ஒரு மெய்ம்மொழியை வான் நிழல் அடியெடுத்துக் கொடுத்து நடத்துதலின், அதன் ஆணைவழியே நின்று ஓதுகின்றேன்' என்று ஐந்து செய்யுட்களால் உருக்கமாய்ப் பணிவு தேற்றினார்.

தேற்றி, இங்கிதன் பெயர் கூறினால், இதனைத் 'திருத்தொண்டர் புராணம்' என்போம். புற இருள், அக இருள் என்று உலகத்தில் இருவகை இருள் உண்டு; புற இருளை நீக்க ஞாயிறு உள்ளது; அக இருளை நீக்க இப்போது இத் 'திருத்தொண்டர் புராணம்' உள்ளது என்று அடிகளார் இதன் பயனும் புலப்படுத்தினார். ஞானச்சுடர் அது, என்பது இதனால் பெறப்பட்டது.

'பெரிய புராணம்' என்னும் 'திருத்தொண்டர் புராணத்'தின் மாட்சிக்கு இதனினும் வேறென்ன வேண்டும்? பாயிரப் பகுதி இதனுடன் நிறைவேறியது.

7

'பாயிரம்' என்பது, நூலின் முன்னுரை. ஒரு பெரிய நகரத்துக்கு அதன் முகப்பில் சிறந்த கோபுரம் நிமிர்ந்து திகழ்ந்து தோற்றமளிப்பதுண்டு; ஒரு நல்ல மாளிகைக்குக் கலை நலம் அமைந்த ஓவியங்கள் அங்கங்கும் அமைந்து கவர்ச்சி மிகுப்பதுண்டு.

நகரத்தில் நுழையுமுன், கோபுரத்தின் தோற்றமே, நகரம் எப்படியிருக்கும் என்னும் மதிப்பை எடுத்துக்காட்டும்; அவ்வாறே மாளிகையைப் பற்றிய மதிப்பையும் ஓவியங்கள் எடுத்துக்காட்டும்; அதுபோல, நூலின் மதிப்பையும் இயல்பையும் எடுத்துக்காட்டுவது, அதன் பாயிரம்.

முன்னுரையை முதலில் அறிந்துகொண்டால், நூலின் அமைப்பு, நெறிமுறை, கருத்து முதலியன விளக்கமாய்த் தெரியும்; வழிவகைகள் தெரிந்தபின், நூலில் நுழைந்தால், அதனை வழிதுறையோடு எளிதாகவும் தெளிவாகவும்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை. 1

தமிழ்த்தாய்.

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."

—புறநானூறு.

கிளை	விகிருதி, தை	தளிர்
3	9-2-51 வெள்ளி	17

- உணவு வகை -

கொலை, களவு, கள், காமம், பொய் என்னும் இவ்வைந்தும் ஐம்பெருங் குற்றங்கள். களவு, காமம், பொய் என்னும் மூன்றையும் உலகத்தில் ஆட்சியினர் பெரிதுங் கட்டுப்படுத்தி வருகின்றனர்.

'கள்' என்னுங் குற்றத்தையும், சிறப்பாகச் சென்னையில், கட்டுப்படுத்தியுள்ளனர். ஆனால், இவை எல்லாவற்றையும் விடக் கொலை பெரிய குற்றம் என்பது, திருவள்ளுவர் முதல் அனைவரும் ஒப்பத் தெளிந்த முடிபு. அதனால் கொலையைக் கட்டுப்படுத்தும் முயற்சியில், பின்னும் மிகுதியாகக் கருத்திருத்த வேண்டுமென்று தெரிகின்றது.

முன்னோர் சிற்றுயிர்க் கொலையுங் கட்டுப்படுத்த முயன்றனர். ஏனென்றால், 'புலால்' என்னும் மற்றொரு குற்றமும் அதனுடன் சேர்தலால்.

ஆட்சி வரலாற்றில் இதை நிறுத்துவதற்கான முயற்சிகளைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றனவா என்பதும் கருத வேண்டும்.

மனுவின் மகன் தேரூர்ந்து செல்கையில், ஓர் ஆவின் கன்றைக் கொன்றுவிட்ட குற்றத்துக்காகத் தண்டிக்கப்பட்டான். சிற்றுயிரையும் மதித்துப் போற்றி வந்த காலம் அது.

மீன் பிடி தொழிலை வளர்க்கும் வழி துறைகளை ஆராய 'இந்திய பசிபிக் மீன் துறைக் கழகத்தினர்' சென்னையில் கூடினர். அக்கூட்டத்தைத் தொடங்கிவைத்த உணவு அமைச்சர், முற்கால அசோகன் முயற்சி ஒன்றைப் பற்றிக் குறிப்பிட்டார். அதாவது; அசோகன் தனது 5-வது தூண் பட்டையத்தில் (கி. மு 246) மீன் பிடிக்கக்கூடாத காலம் ஒன்றைப் பின்பற்றவும், குறிப்பிட்ட காலத்தில் மீன் பிடித்தல் தொழிலை விடவேண்டும் என்றும் உத்திர விட்டானாம். ஆகவே, முன்னர், ஆட்சியினர் முயன்றிருக்கின்றனர் என்பது தெரிகின்றது.

உணவுப் பற்றாக்குறை காரணமாக மக்கள் இன்னலுறும் இக்காலத்தில், ஊனுணவுப் பெருக்கம் இன்றியமையாததென்று கருதப்படலாம். உணவு அமைச்சரும் மேற்கூறிய கழகத்திற் பேசுகையில், மீன் பிடி தொழிலை வளரச் செய்வதற்கான ஆர்வத்தை வெளியிட்டனர்.

உணவுப் பற்றாக்குறையை நிரப்புவதற்குச் சிற்றுயிர்க் கொலையை ஆதரிக்காமல், உணவு தானியங்களைப் பெருக்குவதிலும் ஆனினங்களை வளர்த்துப் பாற்பெருக்கத்தை மிகுப்பதிலுமே முழுக்கவனம் செலுத்துதல் முதன்மையாகும்.

காந்தியடிகள் தம் வாழ்க்கையில் ஊனுணவை அறவே நீக்கிக் காண்பித்திருக்கிறார். ஊனுணவு உண்டுதான் ஆகவேண்டும் என்னும் சோதனைக்காலங்களிற்கூட, உட்கொள்ளாமல் கொள்கையை நிறைவேற்றி வெற்றி பெற்றிருக்கிறார்.

ஊனுணவை அறவே நிறுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கத் தற்போது இயலாதென்று தோன்றினால், அதன் தடுப்புக்கும் அதனை ஈடு செய்யும் வகையில் ஆன் பயன் முதலியவற்றின் பெருக்கத்துக்கும் இயன்ற முயற்சிகளையேனும் செய்யலாமன்றோ?

—'முத்து'

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

பயின்று மகிழமுடியும். ஆதலால், பாயிரம் என்னும் முன்னுரை, நூலுக்கு இன்றியமையாத ஓர் உறுப்பாகும் என்று தெளிந்து கொள்ளல் வேண்டும். துணையோடு நெடுவழி செல்வதுபோல, மாணவர்க்குப் பாயிரம் ஒரு துணைபோல நின்று பெரிதும் உதவும்.

திருத்தொண்டர் புராணத்தின் பாயிரத்தால், அந்நூலின் அமைப்பு முறை முதலியன தெளிவுபடுகின்றன.

முழுமுதல் இறைவன் தொடர்பினால் தலைமையும், தொண்டுணர்வு என்னுங் கருணையால் எளிமையும், இவ்விரண்டின் விளக்கத்தால் காரிய நலமும் வாய்ந்தது 'பெரிய புராணம்' என்பது இனிது விளங்கிற்று. மேலும், இயல்பு என்னும் உண்மை நெறியில் அமைந்து இயல்பாகவே பிறவிப் பயன் உண்டாக்கும் ஆற்றல் வாய்ந்தது.

குருகுலத்தில்

[26—1—51 வெள்ளி
பெற்றோர் கழக விழா]

பாடசாலைக் கண்காணிப்பாளர் தலைமையுரை

இங்கு வீற்றிருக்கும் அனைவர்க்கும் என் அன்பினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டு திங்களுக்கு முன் இக் குருகுலத்தில் ஒரு விழாவிற் கலந்துகொள்ளும் வாய்ப்பு எனக்கு நேர்ந்தது. படிப்பகத்தைத் திறந்து வைத்தேன்!

எனக்கு விழாத்தலைமை நேர்ந்தது' என்னிடம் குருகுலத் தலைவர்க்கு உள்ள அன்பினாலும், கல்வித்துறையில் நான் ஈடுபட்டிருக்குங் காரணத்தாலும் என்று நினைக்கிறேன்.

இன்று உரிமை நினைவு நாள். வேற்று நாட்டவர் ஆட்சித்தளையினின்று விடுபட்டு, முழு உரிமையோடு நம்மை நாமே ஆளத்தக்க நிலையில் நாம் இருக்கின்றோம். உரிமை உணர்ந்து இந் நாளில், பெற்றோர் கழகம் இங்குத் தொடங்குகிறோம்.

'பாடசாலை' என்பது ஒவ்வொரு பெற்றோரும் பள்ளி ஆசிரியர்களோடு கலந்து உழைத்தாற்றான் சிறந்த நிலையில் இருக்க முடியும். இதனைப் பெற்றோர்க்கு நினைவுறுத்தவே இக் கழகம் தொடங்கப்படுகிறது.

நம் அரசியல் திட்டம் 'ஜனநாயகக் குடியரசு' என்னும் அடிப்படைக் கருத்தால் அமைந்தது. நாட்டை ஆளும் முழுப்பொறுப்பு பொது மக்களுக்கு உண்டு. பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமக்களே இப்போது அரசியலை நடத்துகிறார்கள். ஆங்கிலேயர் ஆட்சி இருந்தபோது இந் நிலைமை இல்லை. அரசியலுக்கும் பொது மக்களுக்கும் இடையில் எவ்வளவோ தூரம் இருந்தது.

இப்போது அந் நிலை மாறிவிட்டது அரசியல் உறுப்பினர்களை அமைப்பது பொது மக்களாகிய நம் கையிற்றான் இருக்கிறது.

இச் செயலுக்கு முதன்மையானது கல்வி. பத்து ஆண்டுகளுக்குள் எல்லோரும் படித்தாகவேண்டும் என்று நாம் உறுதி மேற்கொண்டாலொழிய கல்வி பரவுவதற்கு வாய்ப்பில்லை.

இதுவரையிற் கல்வி பயிலாத முதியோரும் இந்த உரிமை அரசு நாளில் கல்வி பயின்றாகவேண்டும். இதற்காகவே ஆங்காங்கு முதியோர் கல்விக் கழகங்கள் தொடங்கப் பெறுகின்றன. இக் குருகுலத்தின் சார்பிலும் அப்படிப்பட்ட முதியோர் கல்விப்பயிற்சி தொடங்கப் பெறுதல் நலம் என்று பொறுப்பாளர்க்கு நினைவுறுத்துகிறேன்:

கழகத் தலைவர்களும் பெற்றோரும் நன்கு முயன்று குருகுலக் கல்விப் பணிக்கு உதவியாயிருந்து கிராமங்களில் கல்வியைப் பரவச் செய்வார்களென்று நம்புகிறேன்.

திரு R. கோபாலகிருஷ்ணன் M.A., B.L.

(சப் மாஜிஸ்ரேட், மதுராந்தகம்)

இனிய தமிழுரை

இக் கூட்டத்தில் கலந்துகொள்ள வாய்ப்பு நேர்ந்ததைக் குறித்துப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இது, ஒரு, நன்னாள். எங்கும் 'சுதந்தர தினம்' கொண்டாடப்படுகிறது.

நம்நாடு குடியரசு நாடு. நம்மை நாமே ஆளும் வாய்ப்பு நமக்கிருக்கிறது. நம்மால் தேர்ந்தெடுக்கப்படும் நம் சார்பாளரே நாட்டை ஆளுகிறார்கள். நாம் அனைவரும் சென்று பாராளுமன்றத்தில் அமர்ந்து செயலாற்றுதல் என்பது நடவாத செயல். எனவே ஒரு 'பத்து லக்ஷம்' பேருக்கு ஒருவராகச் சார்பாளர்களும் அவர்களில் தேர்ந்தெடுக்கப்பெற்ற மந்திரிகளும் நாட்டில் ஆட்சி நடத்துகிறார்கள்.

இவ் வாட்சியில் பொது மக்களுக்குப் பெரும் பொறுப்பு இருக்கிறது. ஆட்சியில் மேற்கொள்ளும் கொள்கைகள், சட்டங்கள் இவைகள் நாட்டு நிலைமைக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளன. மந்திரிகள், உறுப்பினர்களில், நாட்டுப் பண்புக்கு ஒவ்வாத முறையில் நடப்பவர் யாராவது காணப்பட்டால் அவர்களை மாற்றியமைக்கும் அதிகாரமும் மக்கள் கையிலேயே இருக்கிறது. பாராளு மன்றத்தில் அவ்வப்போது கொண்டுவரும் 'மசோதா'க்களை ஆய்ந்து பார்க்கவும், ஒவ்வாதன வாயின் மாற்றியமைக்க முயலவும் பொது மக்களுக்கு இடமுண்டு.

ஆயினும் 'மசோதாக்'களைத் தீர்மானிக்கும் அளவுக்கு நாட்டில் கல்வி பரவவில்லை. கல்வி குடியரசு நாட்டுக்கு முதன்மையானது. தற்காலம் 100-க்கு 8 பேர் கூட நன்கு படித்தவர்கள் நாட்டில் இல்லை. கல்வித் துறையில் மக்களுக்கு அக்கறை உண்டாகும்படி ஆட்சியாளர் நாட்டில் வசதிகள் செய்து தருதல் நலமாகும்.

குடியரசு நாட்டில் கல்வி முன்னேற்றத்தில் பெற்றோருக்குச் சிறந்த பங்குண்டு. பெற்றோர், கல்வி முன்னேற்றத்துக்கான முயற்சிகளைத் தம் கடமையாகவே கருதி உழைக்க வேண்டும். ஆட்சியாளரையே, முழு உதவிக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருத்தல் நலமன்று. கல்விக்குப் பொது மக்கள் உதவி மிகவும் தேவை. பொருள் உதவி செய்ய வசதி உள்ளவர்கள் பொருள்களாக உதவி, கல்வியை வளர்க்கலாம்.

....

அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம்பதி னாயிரம் நாட்டல்

....

அன்னயாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோரேழைக் கெழுத்தறி
வித்தல்

என்று பாரதியார் சொன்னதுபோல், ஏழைக்கு எழுத்தறிவித்தலே தற்காலத்துக்குப் பொருத்தமானது.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE
MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

பொருள் வள மில்லாதவரும் கல்வியை வளர்க்க எவ்வளவோ வழிகள் உண்டு. தம்மால் ஆனவற்றை உதவி செய்து கல்வியை வளர்க்கலாம். விவேகாநந்தர் 'பிறருக்கு உதவும் நிலைமை நமக்கு வாய்ப்பதே ஒரு பெரும் பேருகக் கருதவேண்டும்' என்று சொல்லியிருக்கிறார்.

பெற்றோர் தம் குழந்தைகள் ஒழுங்காகப் பள்ளிக்குப் போதலைக் கவனிக்கவேண்டும். மாணவர்களில் சிலர் இயல்பாகவே கெட்டிக்காரராக உள்ளனர்; சிலர் இல்லை. திருவள்ளுவர் சொல்லியதுபோல், பிறப்பு எல்லா உயிர்க்கும் சமமாகும். சூழ் நிலையையும், செய் தொழிலையும் ஒட்டியே மக்களிடையில் மாறுதல்கள் காணப்படுகின்றன. பெற்றோர் தம் இளஞ் சிறுர் பிற்காலத்தில் சிறந்தவர்களாகத் திகழ இப்போதிருந்தே முயல வேண்டும்.

ஆசிரியர்கள் சென்று அழைத்த பின்னர்த்தான் குழந்தைகள்பள்ளிக்கு வருதல் என்பது ஒழிந்து, அவர்கள் தாமாகவே வரும்படி பெற்றோர் அவர்களைப் பழக்குதல் வேண்டும். இதற்காகவே 'பெற்றோர் கழகம்' இங்குத் தொடங்கப்படுகிறது.

ஏழை மாணவர்களில் எத்தனையோ பேர் அறிவுச் செல்வங்களாக இருந்தும் வசதி குறைந்தவர்களாக உள்ளனர். முன்னுக்கு வரக் கூடிய அவர்கள் தம் சூழ்நிலையால் கெட்டுவிடுகின்றனர். அவ்வாறு கெடாத நிலையில் பெற்றோர் அவர்களைப் பழக்கவேண்டும்.

எழுதப்படிக்கத் தெரியவில்லை என்று முதுமையில் வருந்துவது நல மன்று. இளமைதான் கல்வி பயிலத் தகுந்த காலம். ஆனல் இளம் பருவம், தானே பொறுப்புணரக்கூடிய கால மன்று. பெற்றோரே அப் பொறுப் பினை ஏற்று இளஞ்சிறுர்களைக் கல்வி பயிலச் செய்யவேண்டும்.

பெற்றோர் முயற்சியாற்றான் மாணவர்கள் அறிவும் திறமையும் பெறமுடியும். இளமையில் சிறுவர்களுக்கு எளிதில் தீய பழக்கங்கள் தொடரக்கூடிய நிலை உண்டாகும். இந் நிலையில் பெற்றோர் விழிப்பாக நடக்கவேண்டும். தாம் தீய பழக்கங்களைக் கடைப் பிடித்து ஒழுகிவரும் அதே நேரத்தில் தம் சிறுவர்கள் நல்லொழுக்கத்தில் நடப்பார்கள் என்று பெற்றோர் எதிர் பார்க்க முடியாது. ஆகவே பெற்றோரே தக்க வழிகாட்டிகளாக இருந்து தம் குழந்தைகளின் பிற்கால வாழ்க்கைக்கு வழிகோல வேண்டும்.

மற்றும் குழந்தைகள், செல்வர் ஏழைகள் என்று தம்முள் பகுத்துணரும் வன்மை யில்லாதவர்கள். செல்வர் வீட்டுப் பிள்ளைகள்போல் தாமும் நடக்கவேண்டும் என்று ஏழைச் சிறுவரும் விரும்புவார்கள். பெற்றோரிடம் வற்புறுத்திவசதிகளைச்செய் கொள்ள விரும்புவர். இதற்காகப் பெற்றோர் அவர்களைக் குறைசொல்லி மடக்காமல் தங்களால் இயன்றவரையில் தம் வசதிகளைக் குறைத்துக்கொண்டு, தக்கபடி சிறுவர்க்கு வசதிகள் செய்து தரவேண்டும்.

இவைகள் குடியரசு நாட்டில் பெற்றோர் கடமையாகும். இன்று இவண் தொடங்கும் பெற்றோர் கழகம் தொடர்ந்து நல்ல பணியாற்றவேண்டும். தோன்றுவதுபோல் தோன்றித் தேய்ந்துபோதல் கூடாது. இன்று ஏற்றிவைத்த விளக்கு அணையாமல் பாதுகாப்பது பெற்றோருக்கு முதன்மையான கடமையாகும்.

கந்தர் கழ லெழுபது

[திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை M. A.]

29. தாவடி யோட்டுந் தனிமயிலின் மீதுமன்பர்
பாவடி யேட்டிலும் பட்டதன்றே[1]—மூவடிமண்
வேண்டி விளையாடும் விண்டு மருகராங்
காண்டகுநங் கந்தர் கழல்.

30. எழுவாய் இலாதாய் இறுவா யிலாதாய்
வழுவா மருத்துவமாய் வைகும்[2];—அழுதே
உளங்கசிவா ருள்ளத்தே ஊறமுதா நீடுங்
களங்கமிலாக் கந்தர் கழல்.

31. வேதன் முடிக்கமலம் விண்ணோர் சிரப்பதுமம்
நாதன் புயக்கஞ்சம் நம்மையாள்—காதன்
மயிலின் புறமுளரி வள்ளி யுளப்பூ[3]
கயிலைமகிழ் கந்தர் கழல்.

32. வையகமெல் லாந்தன்கீழ் வைகுறினும் போதாமல்
நையகங்கொண் டேவினைகள் நானிலத்திற்—செய்யச்செய்
ஏனுலாம் யானெனதங் கிற்ற இடத்தேதான்[4]
காணலாம் கந்தர் கழல்.

---

1. கந்தரலங்காரம் "தாவடியோட்டு..."15
2. "எழுவா யிறுவாய் இலாதான எங்கள் பிணிதவிர்த்து
வழுவா மருத்தவ மாவன * * அழுவார்க் கமுதங்கள்
காண்க ஐயாறன் அடித்தலமே"—அப்பர் IV-92-5.
3. கமலம், பதுமம், கஞ்சம், முளரி, பூ—தாமரை.
திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ்—சிற்றில்-1.
4. "யானெனதங் கற்ற இடமே திருவடி..."—கந்தர் கலிவெண்பா

அதேநேரத்தில் சத்திவர்மன், தன் மனைவி சாந்தினியிடம் விடைபெற்றுத் தானும் இராஜராஜனுடன் போருக்குச் செல்வதற்கு வந்தான். அவள் கண்ணீர் மல்கிய கண்களுடன் இருந்தாள். 'எதற்காகக் கலங்குகிறாய்' என்று அவளிடம் நெருங்கிய சத்திவர்மனின் கால்களைக் கட்டிக்கொண்டு 'கோ' வென்று கதறினாள்.

அவளைப் பரிவுடன் தூக்கிப் பக்கத்திலிருத்திக் கொண்டான். அவள் அழுதுகொண்டே 'தாங்கள் தயவு செய்து எனக்கு உறுதிமொழி ஒன்று தரவேண்டும். தாங்கள் வீரருடன் போருக்குச் சென்று வெற்றிவாகையுடன் வந்ததும், சிறையிலிருக்கும் தங்கள் தம்பியை, உம்மை ஒருசமயம் உயிர் நெருக்கடியினின்றும் காத்து என் வாழ்வை விளங்கச் செய்த தங்கள் தம்பியைச், சிறையிலிருந்து விடுவித்து, அவர் உயிருக்குப் பங்கம் ஏதும் வராமல் செய்யத் தாங்கள் உதவி செய்வதாய் வாக்களிக்கவேண்டும். இதுதான் நான் முழுவுள்ளத்தோடு, தங்களை வேண்டும் வரம். அவர் உள்ளமும் ஏதோ துன்பத்தால் வாட்டமுற்று விளங்குகிறது என்பது அவர் உடம்பு துரும்பென இளைத்திருப்பதிலிருந்து தெரியவில்லையா?'

சாந்தினி! எனக்கும் உள்ளூர அந்த விருப்பம் உண்டு. அவன் அரச சபையில் பேசியதன் சுருக்கத்தைக் கவனித்தால், அவனும் நம் விடுதலைக்கு, நாம் நாடு பெறுவதற்கு மிகவும் முயற்சி யெடுத்துக்கொண்டிருக்கிறான் என்று விளங்குகிறது. என்னால் கூடியவரையில் அவனுக்கு நன்மைபுரிய முயலுவேன். நீ மருந்துக்கும் வருந்தாதே. அன்புடையாய்! எனக்கு விடைகொடு என்று கூறி, அவளைத் தேற்றி அவனும் போருக்குச் சென்றான்.

* *

விமலாதித்தன் உள்ளம், சிறை புகுந்ததற்காகச் சிறிதும் வருத்தம் அடையவில்லை. அவன் வேத்தவையில் இருந்த சிறிது நேரத்திற்குள் தன் அண்ணியின் முகம் தன்னைப் பார்த்து எந்தெந்த வகைகளில் மாறுதல் அடைந்தது என்பதைக் கவனித்

பகையா? உறவா?

[அ. கி. வீராகவன்]

தான். தன்னை இராஜராஜன் கொல்வேன் என்று கூறியபோது, தன் அண்ணியின் கை தன்னையறியாமல், அவள் இடுப்பிற்குச் சென்றது என்பதைக் கவனித்தான். அவள் இடுப்பில் உடைவாளின் முனை சிறிது தெரிந்துகொண்டிருந்தது அவனுக்கு மட்டுந்தான் தெரிந்தது. அதை எதற்கு வைத்துக்கொண்டிருக்கிறாளோ! அன்னையினும் மேலான அன்பு தன்மேல் அண்ணி கொண்டிருக்கிறாள் என்பதை யுணர்ந்தான். அண்ணி, தன்னை அன்னை இறந்ததிலிருந்து 'தாய்மை' யுணர்ச்சியோடு வளர்த்தவள் என்பதை அறிவான். 'நேற்று வந்தவளுக்குத் தன்மேல் இருக்கும் தாய்மை யன்பைக் கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைவான். 'பிறகு கழுவி லேற்றுகிறேன். இப்போது சிறையிலடையுங்கள்' என்று இராஜராஜன் கூறியபோதும் தன் அண்ணியின் கண்களில் கண்ணீர் நிறைந்திருந்தது அவனுக்கு மட்டுந்தான் தெரிந்தது, அவளுக்குப் பக்கத்தில் ஓர் அழகான மங்கைநல்லாள் அமர்ந்திருந்ததை அவனும் கவனித்தான். அவள் தன்னையே உற்றுப் பார்ப்பதையும் உணர்ந்தான். காரணம் அவனால் அறியக்கூட வில்லை. அவள் யாரென்றும் அவனால் தெரிந்து கொள்ள முடியவில்லை. இந்த வகையாகச் சிந்தனை செய்துகொண்டிருந்தான் அவன்.

படைகளெல்லாம் பாண்டிய நாட்டை நோக்கிப் புறப்பட்டுவிட்டன. மூன்று தலைவர்கள் அப்படைகளைத் திறம்பட நடத்திச் சென்றனர். இராஜராஜன், சத்திவர்மன் இராஜேந்திரன் மூவரும் தங்கள் தங்கள் திறமைகளை யெல்லாம் பயன்படுத்திச் சோழ நாட்டுப் படையினைப் பகைவன் பாண்டியனுக்கு எதிராக நடத்திச் சென்றனர் இதுவரை இம்மாதிரி, போர் வீரர்களைத் திறம்பட எவரும் நடத்திச் சென்றதில்லை என்று கண்டோர் கூறினர்.

சிறையில் இருக்கும் விமலாதித்தன் கூண்டில் அகப்பட்ட புலிபோல் குறுக்கும் நெடுக்குமாக உலவிக் கொண்டிருந்தான். அவன் மூளை வலிவாக வேலை செய்தது. தூங்கி விழுந்துகொண்டிருந்த சிறைக் காவலனை உரத்துக் கூப்பிட்டுக் குடிப்பதற்குச் சிறிது குளிர்ந்த தண்ணீர் வேண்டுமென்றான். அவ்வாறே அக்காவலன் ஒரு மண் கலயத்தில் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்துவிட்டு மறுபடியும் உறங்குவதற்குச் சென்றுவிட்டான். இடுப்பில் எவருக்கும் தெரியாமல் சுருட்டிவைத்திருந்த தகரச் சிமிழ் ஒன்றை எடுத்தான். அதில் ஏதோ இருந்தது. ஆ! நஞ்சா அது! ஐயோ! அவன் வாழ்வு அப்படியா முடியவேண்டும். அதில் இருந்ததை வாயில் கொட்டிக்கொண்டு தண்ணீரைக் குடித்துவிட்டான். வாயிலிருந்து குருதி பெருகுவதற்குத் தொடங்கியது. விழுந்தது அவ்வீர வுடல்! இறந்தான் அவ் விளைஞன்! மடிந்தான் மறக்குடியில் பிறந்த அம் மறவோன்! கீழே விழுந்து கிடந்தது அவ்வுடல்.

(தொடரும்)

கைத்தறி ஆடைகள்

வணிகக் குறி!

—N. K. M.—

தங்கநாடா

(பதிவு)

எண் 20 முதல் 100 வரையில் வேட்டி, சேலை, துண்டு, போர்வை, மேலாடை முதலியவை பல வகைகளிற் கிடைக்கும்.

நூலாடைகட்கும் பட்டாடைகட்கும்

நம்பிக்கையான இடம்:

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,

துணி வாணிபம்,

53, கிடங்குத் தெரு, சென்னை 1.

"முல்லைக் கொடி"

குருகுலத்தின் கிழமை இதழ்.

நல்ல தமிழில், புரியும் வகையில்,
உரிய விலையில்,
பலதுறைக் கருத்தில்,
சீர்திருத்த முறையில்,
சிறந்த ஆக்கப் பணி உருவில்
வெள்ளிக் கிழமைதோறும்
வெளிவரும்
ஒரு பெருந்தன்மையான
உணர்ச்சி வெளியீடு!

ஆண்டுக் கையொப்பம் ரூ. 4
வெளிநாட்டுக்கு ரூ. 5

குறிப்பு :—

குருகுலத்தார்க்குக் கட்டணம் இல்லை; தமிழாசிரியர்க்கும், திருவள்ளுவர் கழகங்களுக்கும் ஆண்டுக் கையொப்பம் ரூ 3 மட்டும்.

இதழ் விற்பனையாளர்

எல்லா ஊர்களிலும் தேவை;
ஆறில் ஒன்று கழிவு தரப்பெறும்.
இசைந்த முன்பணத்துடன்
தேவைக்கு எழுதுக!

விளம்பரத் திட்டம்

உள் பக்கம் :

ஒரு பத்தியில் ஓர் அங்குலம் ஒரு தடவைக்கு ரூ. $1\frac{1}{2}$. நீண்ட கால ஒப்பந்தங்களுக்கு ரூ. 1.

கு-பு.—நான்கு அங்குலத்துக்குக் குறையாத விளம்பரமும், ஓர் ஆண்டுக்குக் குறையாத ஒப்பந்தமும் முதன்மையாகக் கவனிக்கப்பெறும்.

மேல் பக்கம் :

முழுப் பக்கம் ஒரு தடவைக்கு ரூ. 30
அரைப் பக்கம் ,, ,, ரூ. 16
ஒரு பத்தி ,, ,, ரூ. 12

கு-பு.—தொடர்ந்த விளம்பரங்களுக்கு, கட்டண எளிமை கருதப் பெறும்.

குருகுலம், மாம்பாக்கம்;

(வடதிருச்சிற்றம்பலப் பெருவெளி)

மதுராந்தகம் (அஞ்.)

இது,

திருக்குறள் மறைக்குச்

செய்கை நிலையம்.

நாட்டு மக்கள், 'மொழி' 'கலை' 'தொழில்' 'அருள்' 'பணி' என்னும் ஐவகை வாழ்வியல் திறமைகளிற் சிறந்து திகழ்வதற்கு முயல்வது.

பள்ளி, கல்லூரி, கலையரங்கு, அச்சகம், நூற்பதிப்பு, இதழ்ப் பதிப்பு, படிப்பகம், தொழிலகம், அருள் நிலையம், உணவு விடுதி முதலிய பல்வகை உறுப்புகளுடன் பணி புரிவது.

வாழி, மன்பதை!

குருகுலத்தில் உணவு விடுதி

- பிள்ளைகள், பண்பிலும் திறமையிலும் இளம்பருவத்திலிருந்தே பழக்கம் பெற, குருகுல வாழ்க்கைதான் சிறந்தது!
- சுவைபொருந்திய நல்வாழ்க்கையைச் சிறு பருவத்திலேயே உருவாக்கிக்கொள்ள, எப்போதும் குருகுலச் சூழலே ஏற்றது.
- மதுராந்தகம் உயர்நிலைப்பள்ளி முதலிய அண்மையிடங்களிற் சென்று கல்வி பயில்வோர், குருகுல விடுதியில் இருக்க விரும்பினால், அவர்க்கும் இடம் அளிக்கப்பெறும்.
- உணவுத் தட்டும் விலையுயர்வும் உள்ள இக் காலத்தில் ஆண்டுக்கு ரூ. 200-க்கு மேற்படாத குறைந்த செலவிலும், விடுதியிற் கலந்து கொள்ள வாய்ப்புண்டு.
- தூய்மையிலும், பணியிலும், ஒருமையிலும் ஆர்வமுடையோர்க்குக் குருகுல இல்லத்தின் வாயில் என்றுந் திறந்திருக்கின்றது!

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர் : தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.).